தமிழ்நாட்டை அவமானப்படுத்தும் ஆளுநரை கண்டித்து

மாவட்ட தலைநகரங்களில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

திமுக அறிவிப்பு

சென்னை, ஜன.7: தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திமுக அறிவித்துள்ளது.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் ஆர்.என். ரவி மாநில உரிமைகளை சிதைத்து, மாநில சுயாட்சியை பறிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். 2023ம் ஆண்டு சட்டமன்றத்தில் ஆளுநர் ரவி உரையாற்றிய போது, மதச்சார்பின்மை, சுயமரியாதை, பெரியார், அம்பேத்கர், கலைஞர் ஆகிய சொற்களை உச்சரிக்கவில்லை.'அரசு கொடுத்த உரையில் இருப்பதுதான் அவை குறிப்பில் இடம் பெறும்' என முதல்வர் மு.க.ஸ்டாலின் அப்போதே நேருக்கு நேர் பதிலடி கொடுத்ததும், ஆளுநர் ஆர்.என்.ரவி அவையில் இருந்து வெளியேறினார். 2024ம் ஆண்டு ஆளுநர் உரையின் தொடக்கத்தில், தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் பாடப்படுகிறது, தேசிய கீதம் பாடப்படுவது இல்லை எனக்கூறி உரையை வாசிக்காமல் அமர்ந்தார் ஆளுநர் ரவி. முந்தைய ஆண்டில் கூறிய அதே துருப்பிடித்த ஆயுதத்தை இந்த ஆண்டும் மீண்டும் தூக்கி கொண்டு வந்து, அவையில் இருந்து உரையை வாசிக்காமல் வெளியேறியிருக்கிறார் ஆளுநர் ரவி.

தொடக்கத்தில் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும் என்ற தன்னுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் உரையை படிக்காமல் வெளியேறியதாக ஆளுநர் அளித்த விளக்கம் புல்லரிக்க வைக்கிறது. சில மாதங்கள் முன்பு பிரசார் பாரதியின் இந்தி மாத விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்ற போது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் அவமதிக்கப்பட்டது. இப்போது தேசிய கீதம் முதலில் பாடவில்லை என சொல்லி மறைமுகமாக தமிழ்த்தாய் வாழ்த்தை ஆளுநர் எதிர்த்திருக்கிறார். அன்று தமிழ்த்தாய் வாழ்த்தில் திராவிட நல் திருநாடும் என்பதை விடுத்துவிட்டு பாடி நமது தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்தார். இன்று சட்டமன்றத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட்டதை சகித்துக் கொள்ளாமல் ஆளுநர் ரவி, தேசிய கீதம் என்ற போர்வையை போர்த்தி கொண்டு உடனடியாக சபையை விட்டு வெளியேறி, தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்திருக்கிறார்.

ஆளுநர் உரையின் போது தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும் இறுதியில் தேசிய கீதமும் பாடப்பட்டு வருவதுதான் நடைமுறை. இதனை தகர்ந்து ஆளுநர் ஒருவரே நடந்து கொள்கிறார் என்றால், அது அரசியல் அல்லாமல் என்னவாக இருக்க முடியும்?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மீறி ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் தனித்து செயல்படுவது மக்களாட்சியை அவமதிக்கும் செயல். இந்திய அரசியல் சாசனத்திற்கே எதிரானதாகும். குஜராத் முதல்வர் மோடி இருந்த போது உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு, லோக் ஆயுக்தா விவகாரங்களில் ஆளுநர் கமலா பெனிவாலுடன் மல்லுக் கட்டினார். இதனால் கோபம் அடைந்த முதல்வர் மோடி மாநில உரிமையை நிலைநாட்ட அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் அனுப்பினார். 'கூட்டாட்சிக் கொள்கைகளை மீறும் கவர்னரை திரும்ப அழைக்க வேண்டும். ஒரு மாநிலத்தின் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையின்படி செயல்பட வேண்டும்' என்று கடிதத்தில் மோடி குறிப்பிட்டிருந்தார். அந்த மோடி பிரதமர் ஆன பிறகு பாஜவை எதிர்க்கும் மாநில அரசுகளை ஆளுநர்கள் மூலம் இடையூறு செய்து வருகிறார்.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அதிமுக- பாஜ கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் திமுக சார்பில் 7ம் தேதி (இன்று) காலை 10 மணியளவில் மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இது மாநில உரிமைக்கான போர். இதில் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

துணை முதல்வரிடம் வீரர்கள் வாழ்த்து

▶ முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், பள்ளிக் கல்வி துறையில் பணிபுரிய, பணி நியமன ஆணைகள் பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நேற்று தலைமை செயலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பள்ளி கல்வித்துறை செயலாளர் மதுமதி.

ஈடி ரெய்டுக்கும் என் டெல்லி பயணத்திற்கும் சம்பந்தம் இல்லை

அமைச்சர் துரைமுருகன் பேட்டி

சென்னை, ஜன.7: நான் இலாகா சம்பந்தமாக, டெல்லிக்கு போய்விட்டு வருகிறேன். ஈடி ரெய்டுக்கும் என் பயணத்திற்கும் சம்பந்தமில்லை. நீங்கள் கற்பனையாக எழுதுகிற கதைகளுக்கெல்லாம், நான் ஆள் இல்லை என்று அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் டெல்லியில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஏர் இந்தியா பயணிகள் விமானத்தில் சென்னை திரும்பினார். அப்போது அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எனது இலாகா சம்பந்தமாக, நான் டெல்லிக்கு சென்று விட்டு வந்துள்ளேன். நீங்கள் கற்பனையாக எழுதுகிற கதைக்கெல்லாம் நான் ஆள் இல்லை. ஈடி ரெய்டுக்கும் என் டெல்லி பயணத்திற்கும் சம்பந்தம் இல்லை. ரெய்டுகள் எல்லாம் எங்களுக்கு பழக்கமான ஒன்றுதான். அது ஒன்றும் புதிது இல்லை. இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

எதிர்க்கட்சிகள் விஷமத்தனமான பிரசாரம்

விஷத்தை முறிக்கிற மூலிகையை முதல்வர் கையில் எடுத்துள்ளார்

அமைச்சர் சேகர்பாபு பேட்டி

சென்னை, ஜன.7: விஷமத்தனமான பிரசாரத்தை எதிர்க்கட்சிகள் கையில் எடுக்கிறார்கள். விஷத்தை முறிக்கின்ற மூலிகையை முதல்வர் கையில் எடுத்துள்ளார் என அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஓட்டேரி பகுதியில் 5வது நாளாக நேற்று காலை அமைச்சர் சேகர்பாபு மற்றும் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா நடைபயணமாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மேயர் பிரியா, "ஒவ்வொரு வார்டுக்கும் நேரில் சென்று பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து வருகிறோம் அந்த வகையில் இன்றைய தினம் பள்ளிக்கூடம், கோயில், பொது இடங்களில் உள்ள பிரச்னைகள் என்னென்ன என்பது குறித்து பொதுமக்களிடம் நேரில் கேட்டறிந்தோம். வடசென்னையில் தொடங்கி இருக்கக்கூடிய இந்த களஆய்வு மத்திய சென்னை, தென்சென்னை பகுதிக்கு உட்பட்ட வார்டுகளிலும் அடுத்தடுத்து மேற்கொள்ள உள்ளோம்'' என்றார்.

பின்னர் அமைச்சர் சேகர்பாபு கூறுகையில், "நாங்கள் சுதந்திரமாக வருகிறோம். மக்களோடு ஒன்றிணைந்து இருக்கக்கூடிய கட்சி திமுக. கால் படாத சாலைகளே இல்லை என்ற வகையில் பயணிப்பவர் தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். இறக்குமதி செய்யப்பட்ட தலைவர் அல்ல எங்கள் தலைவர். எப்படிப்பட்ட பிரச்னையாக இருந்தாலும் திறந்த புத்தகமாக இருக்கக்கூடிய திமுகவும் திராவிட மாடல் அரசும் சந்திக்க தயாராக இருக்கிறது. விஷமத்தனமான பிரசாரத்தை எதிர்க்கட்சிகள் கையில் எடுக்கிறார்கள். விஷத்தை முறிக்கின்ற மூலிகை முதலமைச்சர் கையில் எடுத்துள்ளார். எல்லா சூழ்நிலையிலும் அசாதாரண சூழ்நிலையிலும் சமாளிக்கக்கூடிய ஒருவர் தான் தமிழக முதலமைச்சர்" என்றார்.

காலாவதியான ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

நிர்வகிப்பதற்காக சிறப்பு அதிகாரிகள் நியமனம்

தமிழக அரசு அரசாணை வெளியீடு

சென்னை, ஜன.7: காலாவதியான ஊரக உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிப்பதற்காக சிறப்பு அதிகாரிகளை நியமித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அரசாணையில் கூறிருப்பதாவது: மொத்தம் 1,19,402 இடங்களில் இருகட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டு இடங்கள் நிரப்பப்பட்டன. 28 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2025 ஜனவரி 5ம் தேதியுடன் நிறைவடைந்துள்ளது. 28 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பஞ்சாயத்துகளை நிர்வகிப்பதற்காக சிறப்பு அதிகாரிகளை நியமிக்கப்பட்டுள்ளது. அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் தொகுதி வளர்ச்சி அலுவலர் கிராம பஞ்சாயத்துகளின் சிறப்பு அதிகாரிகளாக நிமிக்கப்படுகிறார்கள். அதேபோல் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துணையின் உதவி இயக்குநர் (பஞ்சாயத்துகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) ஆகியோர் பஞ்சாயத்து யூனியன்களின் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுகிறார்கள். 9,624 கிராம ஊராட்சிகள், 314 ஊராட்சி ஒன்றியங்கள், 28 மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு புதிய பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படும் வரையில், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகங்களை இந்த சிறப்பு அதிகாரிகள் கவனிப்பார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)1/2025 நாள் : 06.01.2025

வ. எண்	பணியின் விவரம்	மொத்த பணிகளின் எண்ணிக்கை	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம்
1	வார்டு எண்.4,5,6,7,8,9,10,19, 22,23,38,41,43,60,74,75,83, 92,93,95க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல்	22 பணி	21.01.2025 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock)	22.01.2025 மாலை 4.00 மணி (As per the Server Clock)

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –641001. தொலைபேசி எண்.0422 –2396026. Email : commr.coimbatore@tn.gov.in
செ.ம.தொ.இ./51/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.

பெருநகர சென்னை மாநகராட்சி
பாலங்கள் துறை பா.து.ந.க.எண்.பி3 / 005 & 006 / 2025

e-மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை-கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரு உறை முறையில் கோரப்படுகிறது.

i) மண்டலம் - 14 (ம) 15ல் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர். (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் 3 இடங்களில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிதாக பாலம் கட்டும் பணி. பணியின் மதிப்பு ரூ.16.87 கோடி மற்றும் ii) மண்டலம் - 4, வார்டு-38ல் எண்ணூர் சாலையில் வடிவமைப்பு, பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் முறையில் ஏற்கனவே உள்ள இரயில்வே சந்திக்கடவு 2Aக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணி. பணியின் தோராய மதிப்பு ரூ.38.27 கோடி

முன் வைப்புத் தொகை : பணியின் மதிப்பு தொகையில் 1%
ஒப்பம் முன் ஒப்ப கூட்டம் நாள் மற்றும் நேரம் : **20.01.2025 அன்று பிற்பகல் 3.00 மணி**
ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **04.02.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை**
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **05.02.2025 அன்று பிற்பகல் 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.
செ.ம.தொ.இ / 49 / ஒப்பந்தப்புள்ளி / 2025 கண்காணிப்பு பொறியாளர் (பாலங்கள் துறை)

மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது
பல்லவன் இல்லம், அண்ணா சாலை, சென்னை - 600 002.
மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட பேருந்துகளின் உதிரிபாகங்கள் மற்றும் இதர பொருட்களை புதுப்பித்தல் செய்வதற்கு தகுதிவாய்ந்த ஆயண அத்தாட்சி சமர்ப்பிக்கும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மின்-கொள்முதல் இணையதளத்தில் (https://tntenders.gov.in/nicgep/app) ஆயணச் சான்றுகளை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்	ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை
1.	Work order for Reconditioning & Re-Ring work of Leyland & TATA Engine Spares through Labour Contract	Rs.40,000/-
2.	Work order for Reconditioning work of Mechanical Assembly & Spares through Labour Contract	Rs.2,80,000/-
3.	Work order for Reconditioning work of Electrical Assembly & spares through Labour Contract	Rs.80,000/-

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **04.02.2025 பிற்பகல் 2.30 மணி வரை**
ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் : **04.02.2025 பிற்பகல் 3.00 மணிக்கு**
முன் வைப்புத்தொகை மற்றும் அனைத்து ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்களும் அரசு மின் - கொள்முதல் இணையதளத்தில் (https://tntenders.gov.in/nicgep/app) தெரிந்துகொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளியில் ஏதேனும் மாற்றங்கள் (ஏதேனும் இருந்தால்) மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் பதிவேற்றப்படும். மேலும் ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட இணையதளத்தை அவ்வப்போது பார்த்துக்கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/37/ ஒப்பந்தப்புள்ளி / 2025 மேலாண் இயக்குநர்

பேரவையில் இருந்து வெளிநடப்பு ஏன்?

பாமக, பாஜ விளக்கம்

சென்னை, ஜன.7: தமிழக சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்ததற்கு பாஜ மற்றும் பாமக தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தலைமைச் செயலக வளாகத்தில் பாஜ சட்டமன்ற தலைவர் நயினார் நாகேந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது:

மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்பது பாஜவின் கருத்தாக உள்ளது. தமிழக அரசிற்கு சிபிசிஐடி மேல் நம்பிக்கை உள்ளது போல, எங்களுக்கு சிபிஐ மேல் நம்பிக்கை உள்ளது. எனவே, வெளிநடப்பு செய்தோம். அதேபோல், பேரவையில் ஆளுநர் தேசிய கீதம் பாட வேண்டும் என கூறியபோது மற்ற கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுநரை சூழ்ந்து உரையை வாசிக்க விடாமல் தடுத்தனர். ஆனால், தேசிய கீதம் இசைக்கவில்லை என்பதால் ஆளுநர் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்ததாக கூறுகின்றனர். தேசிய கீதம் என்ன இந்த நாட்டின் பிரிவினை கோஷமா? பேரவை மரபில் தேசிய கீதத்திற்கு இடமில்லையா. இது திட்டமிட்டு மாநில அரசுதங்களுடைய பிரிவினைவாத கொள்கையை மறைமுகமாக அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல், தேசிய கீதம் என்பது இந்த நாட்டின் மரியாதை. தேசிய கீதம் பாடுவதில் என்ன பிரச்னை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

வெளிநடப்பு செய்த பாமக சட்டமன்ற தலைவர் ஜி.கே.மணி நிருபர்களிடம் கூறுகையில்

"பாமக வெளிநடப்பு செய்ய காரணம் மாணவி வன்கொடுமையை கண்டித்துதான். இதில் அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. அனைவருக்குமே ஜனநாயக ரீதியாக போராடுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்த விவகாரத்தில் அனுமதி வழங்க அரசு மறுக்கிறது. அதனையும் மீறி போராட்டம் நடத்தினால் அனைவரையும் கைது செய்து மண்டபத்தில் காவல்துறையினர் அடைத்து வைக்கின்றனர். அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, எந்த அமைப்பாக இருந்தாலும் சரி ஜனநாயக ரீதியாக போராடுவதற்கு உரிமை உள்ளது" என்றார்.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்திற்காக

தமிழ்நாட்டுக்கு ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருது

சென்னை, ஜன.7: சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியது முதல் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் அடங்கிய விளையாட்டுப் தொகுப்பு பொருட்கள் வழங்குதல், முன்னெப்போதும் இல்லாத அளவில் விளையாட்டு வீரர்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டங்கள், அரசுப் பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீதம் இடஒதுக்கீட்டின் கீழ் பணி நியமன ஆணைகள் வழங்குதல் போன்ற முன்னெடுப்புகள், விளையாட்டு வீரர்களுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தித் தருவதில் மாநில அரசின் முழு ஈடுபாட்டினை எடுத்துரைக்கின்றன. இத்தகைய தொடர்முயற்சிகள் தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே வலிமை மிக்கதொரு விளையாட்டு மையமாக உருவாக்கி வருகின்றன என்பதற்கு, பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் வெற்றிவாகை சூடிவரும் தமிழ்நாட்டு வீரர்களின் சாதனை ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மருத்துவ துறையில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து தமிழ்நாட்டில் உள்ள 36 அரசு மருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 299 அரசு பொது மருத்துவமனைகள், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,713 துணை சுகாதார நிலையங்களின் மூலம் வலுவான மருத்துவக் கட்டமைப்பை நாம் உருவாக்கியுள்ளோம். இதன் மூலம், பல வளர்ந்த நாடுகளுக்கு இணையாக ஒப்பிடக்கூடிய வகையில், தமிழ்நாட்டின் மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையிலான விகிதம் 25:1000 என்ற உயர் அளவில் அமைந்துள்ளது. உலகெங்கிலும் இருந்து ஆண்டுதோறும் 15 லட்சம் பேர் உயர்தர சிகிச்சைக்காக தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். இதனால், உயர்தர மருத்துவ சிகிச்சைகளை சிறப்பாக வழங்கி, இந்தியாவின் மருத்துவத் தலைநகரமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

மக்களைத் தேடி மருத்துவம் என்ற முன்னோடித் திட்டத்திற்காக, 2024ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருது என்ற மிகப்பெரிய அங்கீகாரத்தை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் தமிழ்நாட்டிற்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை, 2 கோடி பேர் பயனடைந்துள்ளனர். விபத்து நடந்த முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா, சிறந்த அவசர சிகிச்சையை அளித்திட, நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' எனும் திட்டத்தினை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 3 லட்சத்திற்கும் மேற்பட்ட விலைமதிப்பற்ற மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், கட்டணமில்லா மருத்துவச் சேவையைப் பெறுவதற்கான தனிநபர் உச்சவரம்பு ஒரு ₹ 1 லட்சத்தில் இருந்து 2 லட்சமாக தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையை புறக்கணிக்கவில்லை

திட்டமிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்

எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

▶ பேரவைக்கு வெளியே அதிமுக எம்எல்ஏக்களுடன் வந்து, நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் எடப்பாடி பழனிசாமி.

சென்னை, ஜன.7: தமிழக சட்டப்பேரவைக்கு நேற்று யார் அந்த சார் என்ற பேட்ஜ்களுடன் அதிமுக எம்எல்ஏக்கள் வந்தனர். அவர்கள் சட்டசபையில் நின்றுகொண்டு முழக்கங்களை எழுப்பினர். இதையடுத்து, சபாநாயகர் அதிமுக வினரை வெளியேற்றினார்.

பின்னர் எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது:

சட்டமன்றத்தில் ஆளுநரால் உரையாற்றுகின்ற இந்த நேரத்தில் அவர் உரையாற்ற முடியாமல் வெளியேறிய பிறகு சபாநாயகர் உரையாற்றுகின்றார். நம்முடைய வரலாற்றிலேயே சபாநாயகர் உரையாற்றுவது முதன்முறை. இது ஆளுநர் உரையல்ல. சபாநாயகர் உரையாகத்தான் பார்க்கப்படுகிறது.

அதிமுக ஆட்சி இருக்கும் காலகட்டத்திலேயே ஆரம்ப பள்ளி ஆனாலும் சரி, நடுநிலைப்பள்ளிகள் ஆனாலும் சரி, உயர்நிலைப் பள்ளி ஆனாலும் சரி, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்துகின்றவகையில் பல கல்லூரிகளையும், பல பள்ளிகளையும் நாங்கள் திறந்தோம். அதனால் கல்வி வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது. அரசுக்கு எதிராக அல்ல, மாணவிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் போராட்டம் நடத்துகிறோம். அரசாங்கம் இந்த வழக்கை தட்டிக்கழிக்க பார்க்கிறது. இனி இப்படிப்பட்ட சம்பவம் தமிழகத்தில் நடைபெறக்கூடாது என்ற அடிப்படையில் அ.தி.மு.க. செயல்பட்டு கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

TATA
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையா சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 30 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' மற்றும் 'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 10–02–2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிரணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்திவைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 10–02–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 08–02–2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமின்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	28-12-2024 தேதிப்படி நிலுவைத் தொகை
1.	TCHIN0872000100249789 & TCHHF0872000100249093	திரு.V பிரபின் ஆண்டனி திருமதி.ராஜேஷ்வரி	ஒப்பந்த எண்: TCHHF0872000100249093–ன் கீழ் ரூ.21,05,044/– நிலுவை உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. மேலும் ஒப்பந்த எண்: TCHIN0872000100249789–ன் கீழ் தொகை ரூ.1,50,170/– நிலுவை உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது மொத்தத்தில் ரூ.22,55,214/– & 09–05–2024	ரூ.38,93,800/– (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து தொண்ணூற்றி மூவாயிரத்து எண்ணூறு மட்டும்)	ரூ.3,89,380/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்தி முன்னூற்றி எண்பது மட்டும